2003 ஏப்ரல் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வெ. ஏழுமலை.

பிற்பகல் 12-05

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியால் அப்பகுதியில் அரசுக்கு சேதம் இல்லை என்று விவர அறிக்கையிலே கூறப்பட்டுள்ளது. அதோடு மட்டுமல்லாமல், வறட்சியைத் தாங்கும் விதத்தில், நல்ல தரமான, வீரியமான மற்றும் உயரமான மரக் கன்றுகள் நடப்பட்டன; இதனால் 80 விழுக்காடு அளவுக்கு உயிர்ச் செடிகள் உள்ளன என்ற தவறான தகவல் அதிகாரிகளால் கூறப்பட்டுள்ளது. எங்களுடைய பகுதியில் மிகவும் கடுமையான வறட்சி நிலவுகிறது. மக்கள் குடிநீருக்குக் கஷ்டப்படுகின்றார்கள். கால்நடைகளுக்குக் கைப்பம்புகளில் தண்ணீர் வைத்துக் காட்டுகின்றார்கள். எனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்குக் கெட்ட பெயரை உருவாக்கும் வகையில் இவ்வாறு தவறான தகவலைத் தநத அலுவலர்கள்மீது நடவடிக்கை எடுப்பதுடன், உண்மை நிலையை நேரில்கண்டறிந்து, என் தொகுதி மக்களின் குறையைத் தீர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதனைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த இரண்டு கிராமங்களுக்கும் சென்று ஆய்வு நடத்தி, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன நிலவரப்படி அங்கு தவறு நடந்திருந்தால், அதிகாரிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல், மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. சி. சிவசாமி.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, 2001—2003 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக்